தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு
(2012-2013)

(பதினான்காவது பேரவை)

நூற்று ஒன்பதாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 8 MAY 2013)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



பொதுக் கணக்குக் குழு
(2012-2013)

(பதினான்காவது பேரவை)

நூற்று ஒன்பதாவது அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–91 மற்றும் 1991–1992 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2006–2007) அளித்த ஐம்பத்து ஏழாவது அறிக்கையில் (பதின்மூன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON PUBLIC ACCOUNTS
(2012-2013)

(FOURTEENTH ASSEMBLY)

ONE HUNDRED AND NINETH REPORT

REPORT ON THE FURTHER ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE FIFTY SEVENTH REPORT (THIRTEENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2006-2007) ON THE PARAS RELATING TO HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT IN THE REPORT (REVENUE RECEIPTS) OF THE COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA FOR THE YEARS 1990-1991 AND 1991-1992.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கம்
2012–2013ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு	..	v
I. முன்னுரை	..	ix
II. அறிக்கை	..	xiii
III. இணைப்புகள்:—		
இணைப்பு I–நடவடிக்கை மேலும் தொடர விரும்பாத குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள் பற்றிய விவரம்.	..	1–2
இணைப்பு II–நடவடிக்கை மேலும் தொடர விரும்பும் குழுவின் குறிப்புரைகள் / பரிந்துரைகள் பற்றிய விவரம்.	..	3–61

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

CONTENTS

	Pages
Composition of the Committee on Public Accounts for the year 2012-2013 ..	vii
I. Introduction ..	xi
II. Report ..	xv
III. Appendices :—	
Appendix I—Statement showing the observations / recommendations which the Committee has desired not to pursue. ..	1-2
Appendix I—Statement showing the observations / recommendations which the Committee has desired to pursue. ..	3-61

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

2012-2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு

(19-5–2012 ஆம் நாளன்று அமைக்கப் பெற்றது)

தலைவர்

1. திரு. ச. இராமச்சந்திரன்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்,
நிதி அமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. பி.ஜி. நாராயணன்,
தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. வி. சோமசுந்தரம்,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. கே.பி. அன்பழகன்
6. திரு. பி.வி. கதிரவன்
7. திரு. கடம்பூர் ராஜு
8. திரு. வி.பி. கலைராஜன்
9. திரு. ம. குணசேகரன்
10. திரு. ஒ.கே. சின்னராஜ்
11. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
12. திரு. இரா. துரைக்கண்ணு
13. திரு. கே.பி. பரமசிவம்
14. திரு. கு. பவுன்ராஜ்
15. திரு. க. பாண்டியராஜன்
16. திரு. கு.வ. மார்க்கண்டேயன்
17. திரு. ஆர். ராமமூர்த்தி
18. திருமதி ஆர். ராஜலெட்சுமி
19. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. அமு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	..	கூடுதல் செயலாளர்
செல்வி எஸ். பிலோமினா	..	துணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன்	..	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMPOSITION OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS FOR THE YEAR 2012-2013

(Constituted on 19th May 2012)

CHAIRMAN

1. Thiru S. Ramachandran

MEMBERS

2. Hon. ble Thiru O. Panneerselvam,
   Finance Minister (*Ex-Officio*)
3. Thiru P.G. Narayanan
   Chairman, Estimate Committee (*Ex-Officio*)
4. Thiru V. Somasundaram
   Chairman, Public Undertaking Committee (*Ex-Officio*)
5. Thiru K.P. Anbalagan
6. Thiru P.V. Kathiravan
7. Thiru Kadambur Raju
8. Thiru V.P. Kalairajan
9. Thiru M. Gunasekaran
10. Thiru O.K. Chinnaraj
11. Thiru S.S. Sivasankar
12. Thiru R. Doraikkannu
13. Thiru K.P. Paramasivam
14. Thiru S. Paunraj
15. Thiru K. Pandiarajan
16. Thiru G.V. Markandayan
17. Thiru R. Ramamurthy
18. Tmt. R. Rajalakshmi
19. Thiru S. John jacob

SECRETARIAT

Thiru A.M.P. Jamaludeen	..	Secretary
Tmt. R. Amirthavalli	..	Additional Secretary
Selvi S. Philomena	..	Deputy Secretary
Thiru Rm. S. Giridharan	..	Under Secretary


தமிழ்நாடு சட்டமன்றம்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. முன்னுரை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–91 மற்றும் 1991–92 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2006–2007) அளித்த ஐம்பத்து ஏழாவது அறிக்கையில் (பதின்மூன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய நூற்று ஒன்பதாவது அறிக்கையை குழு (2012–2013) அதிகாரமளித்துள்ளவாறு பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–1991 மற்றும் 1991–92 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1996–1997) தனது நாற்பத்து ஒன்பதாவது அறிக்கையை (பதினொன்றாவது பேரவை) 29–4–1997 அன்று பேரவைக்கு அளித்தது. பொதுக் கணக்குக் குழு (2006–2007) நாற்பத்து ஒன்பதாவது அறிக்கையில் (பதினொன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய தனது ஐம்பத்து ஏழாவது அறிக்கையை 3–5–2007 அன்று பேரவைக்கு அளித்தது.

3. ஐம்பத்து ஏழாவது அறிக்கையில் (பதின்மூன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விவரப்பட்டியினை 2012–2013 ஆம் ஆண்டிற்கான குழு 27–09–2012 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் ஆய்வு செய்து இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

4. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவர் (வணிகம் மற்றும் வரவினங்கள் தணிக்கை) ஆகியோருக்குக் குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை 600 009,
27, செப்டம்பர் 2012,
புரட்டாசி–11,
திருவள்ளுவர் ஆண்டு-2043.

ச. இராமச்சந்திரன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

I. INTRODUCTION

I, the Chairman, Committee on Public Accounts having been authorised by the Committee (2012-2013) to submit the Report on its behalf, present this One Hundred and Nineth Report on the further action taken by the Government on the recommendations contained in the Fifty Seventh Report (Thirteenth Assembly) of the Committee on Public Accounts (2006-2007) on the paras relating to Home, Prohibition and Excise Department in the Report (Revenue Receipts) of the Comptroller and Auditor General of India for the years 1990-1991 and 1991-1992.

2. The Committee for the year 1996-1997 presented its Forty Nineth Report (Eleventh Assembly) on the paras relating to Home, Prohibition and Excise Department contained in the Report (Revenue Receipts) of the Comptroller and Auditor General of India for the years 1990-1991 and 1991-92 to the Assembly on 29-4-1997 . The Committee for the year 2006-2007 pressented its Fifty Seventh Report (Thirteenth Assembly) on the recommendations contained in the Forty Nineth Report (Eleventh Assembly) to the Assembly on 3-5-2007.

3. The statement of further action taken by the Government on the recommendations contained in the Fifty Seventh Report (Thirteenth Assembly) was considered and approved by the committee (2012-2013) at its meeting held on 27.9.2012

4. The Committee places on record its appreciation of the valuable assistance rendered by the Secretary, Legislative Assembly and the Principal Accountant General (Commercial and Receipts Audit) in its deliberations.

Chennai-600 009,
27th September 2012
Puratasi-11,
Thiruvalluvar Aandu-2043.

S. Ramachandren,
Chairman,
Public Accounts Committee.

TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றம்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–1991, மற்றும் 1991–92 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வருவாய் வரவினங்கள்) உள்ள உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (2006–2007) அளித்த ஐம்பத்து ஏழாவது அறிக்கையில் (பதின்மூன்றாவது பேரவை) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.

பொதுக் கணக்குக் குழுவின் (2006–2007) ஐம்பத்து ஏழாவது அறிக்கையில் (பதின்மூன்றாவது பேரவை) உள்ள பதின்மூன்று (13) பரிந்துரைகளில் இரண்டு (2) பரிந்துரைகள் அரசு அளித்த பதில்களின் அடிப்படையில் தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகின்றன. இவை குறித்த விவரங்கள் இணைப்பு–I–ல் அளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பதினொரு (11) பரிந்துரைகள் மீது குழு மேற்கொண்டும் நடவடிக்கைகள் தொடர்வதென முடிவு செய்துள்ளது. இவை பற்றிய விவரங்கள் இணைப்பு–II–ல் அளிக்கப்பட்டுள்ளன.

2. இணைப்பு–II–ல் கண்டுள்ள பரிந்துரைக்களுக்கான பதில்கள் ஆறு மாத காலத்திற்குள் அளிக்கப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை-600 009,
27, செப்டம்பர் 2012.
புரட்டாசி–11,
திருவள்ளுவர் ஆண்டு-2043.

ச. இராமச்சந்திரன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

II. REPORT

REPORT ON THE FURTHER ACTION TAKEN BY THE GOVERNMENT ON THE RECOMMENDATIONS CONTAINED IN THE FIFTY SEVENTH REPORT (THIRTEENTH ASSEMBLY) OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS (2006-2007) ON THE PARAS RELATING TO HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT IN THE REPORT (REVENUE RECEIPTS) OF THE COMPTROLLER AND AUDITOR-GENERAL OF INDIA FOR THE YEARS 1990 -1991 AND 1991-92.

Out of Thirteen (13) recommendations contained in the Fifty Seventh Report (Thirteenth Assembly) of the Committee on Public Accounts (2006-2007), Two (2) recommendations has been treated as settled by the Committee in the light of the replies furnished by the Government vide Appendix-I for details. The Committee has decided to pursue further the remaining Eleven (11) recommendations vide Appendix-II for details.

2. The Committee desires that replies to the recommendations contained in the Appendix-II should be furnished within six months.

Chennai-600 009,
27th September 2012
Puratasi-11,
Thiruvalluvar Aandu-2043.

S. Ramachandren,
Chairman,
Public Accounts Committee.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

APPENDICES

APPENDIX - I

STATEMENT SHOWING THE OBSERVATIONS/ RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED NOT TO PURSUE

HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

Serial No. (1)	*Recommendation No.* (2)	*Paragraph No.* (3)	*Subject.* (4)	*Committee's observations / recommendations.* (5)
1&2	27&28	17.5 & 17.6	Loss of revenue due to non observance of provisions of rules.	The Committee notes that as against a sum of Rs.3.18 lakh pointed out in audit the Government reply is for Rs.87,426/- only and desires to have a report on the collection of the entire amount of Rs. 3.18. lakh.

Further Reply from the Department (6)	Further **Comments of the committee** (7)
It has been reported by the Deputy Commissioner (Excise). Coimbatore that notional loss amount of Rs.3,17,500/- with interest amount of Rs. 1,37,119/-have been collected.	Treated as settled.

(Replies Received From Home, Prohibition and Excise Department vide U.O.Note.No.12427/HPE11/2007-9, dated 7-11-2008.)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(5)

தணிக்கையில் ரூ.3.18 இலட்சம் என சுட்டிக்காட்டப்பட்டிருக்கையில் துறை, ரூ.87,426–க்கான விவரத்தினை மட்டுமே குழுவிற்கு அளித்துள்ளது. முழுத்தொகையான ரூ.3.18 இலட்சம் தொகையினையும் வசூல் செய்தது பற்றி அறிக்கை ஒன்றினைப் பெற குழு விரும்புகிறது.

துறையின் பதில்

(6)

கருத்தியல் இழப்புத் தொகை ரூ.3,17,500/– மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ.1,37,119/–ஆகிய தொகைகள் வசூலிக்கப்பட்டுள்ளதாக கோயம்புத்தூர் துணை ஆணையர் (கலால்) அவர்களால் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(7–11–2008–ஆம் நாளிட்ட உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அ.சா.கு எண். 12427/HPE11/2007–9,–ன் மூலம் பதில்கள் பெறப்பட்டன.)

(7)

தீர்க்கப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

APPENDIX - II

STATEMENT SHOWING THE OBSERVATIONS/ RECOMMENDATIONS WHICH THE COMMITTEE HAS DESIRED TO PURSUE

HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

Serial No.	*Recommendation No.*	*Paragraph No.*	*Subject.*	*Committee's observations / recommendations.*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
1	8	6.5	Non-collection of arrears Demand.	The Committee desires that arrears should be collected early lest they become irrecoverable later due to some cause of other. The Committee urges that the Department should take efforts to speed up the collection and would like to have a report with in one month on arrear collection.

Reply from the Department	Comments of the Committee
(6)	(7)
The total collectable balance on the arrears worked out to Rs. 4902. 43 lakhs for the accounts year 2004-2005. Out of this, Rs. 12.95, 190 has been collected upto 30-6-2004 Break - up for the balance amount is furnished below:-	The Committee would like to know the latest position in the pendency of arrears.

Sl. No.	Subject	Amount (Rs. in Crores)
1.	Arrears covered by stay Orders issued by Court.	1.78
2.	Arrears pending in the Court not covered by Stay.	4.17
3.	Revenue Recovery requisition pending in other districts.	7.33

4.	Revenue Recovery requisition pending in other states under R.R. Act.	1.47
5.	Arrears covered by insolvency petition	0.15
6.	Cases of defaulters whereabouts not known.	1.34
7.	Defaulters available and had got no movable/ immovable properties.	1.81
8.	Defaulters available and has got properties to be attached under R.R. Act.	2.22
9.	Likely to be written off.	3.28
10.	Amount to be expunged.	0.81
11.	Amount covered under Remission but yet to be given effect.	3.63
12.	Items not covered by any of the above details.	17.90
	Total	48.89

Following instructions have been issued to the Collectors of all Districts for speedy collection of pending arrears.

(1) The Divisional Excise Officer/ Revenue Divisional Officer should contact the defaulters residing in other District/State personally and collect the arrears due from them.

(2) The Divisional Excise Officers should go to High Court, Madras and see the Government pleader in respect of the pending cases. They should ascertain the present stage of the cases and take action to vacate the stay, if any, granted by the court so as to proceed the collection work immediately.

(3). The Collectors should send daily report by Fax to the office of the Commissioner of Prohibition and Excise regarding every day collection of excise arrears.

(6)

(4) The Collectors were instructed to achieve 2 % collection of pending arrears every month.

(5) The Collectors were asked to involve the Revenue Divisional Officer/ Taluk Tahsildars and Firka Revenue Inspectors also in collecting the huge excise arrears from the defaulters of ex-licensee of erstwhile arrack and toddy shops.

(6) The collectors were instructed to charge sheet those officers who have failed to collect the excise arrears or who have shown a poor collection and in turn the action taken against them should be intimated to the Office of the Commissioner of Prohibition and Excise then and there without fail.

(7) The Collectors of all Districts were instructed to review the progress of collection of excise arrears during the monthly DRA meeting.

In the above circumstances, it is requested to treat the recommendation as settled.

Further Reply from the Department

(8)

The total Collectable balance on the arrears worked out to Rs.40.53 crores for the accounts year 2007-2008 .Out of this, Rs.65,87,962/-has been collected upto 31.3.2008. Break up for the balance amount is furnished below:

Sl.No.	Subject	Amount (Rs.In Crores)
1	Arrears covered by Stay orders issued by Court	1.90
2	Arrears pending in the Court not covered by Stay.	4.51
3	Revenue Recovery requisition pending in other Districts.	7.03
4	Revenue Recovery requisition pending in other states under R.R . Act.	4.54
5	Arrears covered by insolvency petition	0.28
6	Cases of defaulters whereabouts not known	4.03
7	Defaulters available and had got no moveable/immovable properties	1.42
8	Defaulters available and has got properties to be attached under R.R. Act.	4.17
9	Likely to be written off	-
10	Amount to be expunged	0.45
11	Amount covered under Remission but yet to be given effect	4.12
12	Items not covered by any of the above details	7.41
	Total	39.86

Further Comments of the committee

(9)

The Committee notes while the figures given relates to current year, it is silent about arrears position relating to the year 1991-1992. The Committee would like to have the latest position of arrears pertaining to the year 1991-92 and before and before and desires speedy action to collect the arrears and report thereor.

Further Reply from the Department—*Cont.*

(8)

The following are the instructions issued to the officials concerned to achieve progress in collection of arrears.

(1) The Divisional Excise Officer/ Revenue Divisional Officer should contact the defaulters residing in other District/ State personally and collect arrears due from them.

(2) The Divisional Excise Officers should go to High Court, and see the Government Pleader in respect of the pending cases. They should ascertain the present stage of the cases and take action to vacate the stay, if any, granted by the court so as to proceed the collection work immediately.

(3) The Collectors should send daily report by Fax to the Office of the Commissioner of Prohibition and Excise regarding every day collection of excise arrears.

(4) The Collectors were instructed to achieve 2 % collection of pending arrears every month.

(5) The Collectors were asked to involve the Revenue Divisional Officer/Taluk Tashildars and Firka Revenue Inspectors also in collecting the huge excise arrears from the defaulters of Ex-licensee of erstwhile arrack and toddy shops.

(6) The Collectors were instructed to charge sheet those officers who have failed to collect the excise arrears or who have shown poor collection and in turn the action taken against them should be intimated to the Office of the Commissioner of Prohibition and Excise then and there without fail.

(7) The Collectors of all Districts were instructed to review the progress of collection of excise arrears during the monthly DRA meeting. In the above circumstances, it is requested to treat the recommendation as settled.

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

நிலுவையாகவுள்ள தொகையினை ஏதாவது ஒரு காரணத்திற்காக, பின்னர் வசூலிக்க முடியாது போவதற்கு முன்னர், அவற்றை விரைந்து வசூலிக்க வேண்டுமென்று குழு விரும்புகிறது. தொகை வசூலை விரைவுபடுத்துவதற்காக துறை முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று குழு வலியுறுத்துவதோடு, நிலுவையாகவுள்ள தொகையின் வசூல் நிலவரம் குறித்து ஒரு மாதத்திற்குள் அறிக்கை ஒன்றைப் பெறுவதற்கு குழு விரும்புகிறது.

துறையின் பதில்

(6)

2004–2005 ஆம் கணக்கு ஆண்டுக்கு வசூலிக்கத்தக்க நிலுவைத் தொகையின் எஞ்சியுள்ள தொகை மொத்தம் ரூ.4902.43 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. இத்தொகையில் 30–6–2004 வரையில் ரூ.12,95,190 வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை குறித்த தனித்தனி புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	பொருள்	தொகை (ரூபாய் கோடியில்)
1	நீதிமன்றம் பிறப்பித்த தடையாணைக்கு உட்பட்ட நிலுவைத் தொகை,	4.78
2	தடையாணையின் கீழ்வராத நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பாக்கித்தொகை.	4.17
3	ஏனைய மாவட்டங்களில் நிலுவையாக உள்ள ஆயத்தீர்வை வசூல் கோரிக்கைத் தொகை.	7.33
4	ஏனைய மாநிலங்களில், வரி வசூல் சட்டத்தின் கீழ் நிலுவையாக உள்ள ஆயத்தீர்வை வசூல் கோரிக்கைத் தொகை.	1.47
5	நொடிப்பு நிலை அறிவிப்பு மனுவில் சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகை.	0.15

குழுவின் கருத்துரைகள்

(7)

நிலுவையாக உள்ள தொகையின் தற்போதைய நிலவரம் பற்றி அறிய குழு விரும்புகிறது.

6	இருப்பிடங்கள் தெரியவராத தொகை செலுத்தத் தவறியவரின் இனங்களில் சம்பந்தப்பட்ட தொகை.	1.34
7	அசையும்/அசையாச் சொத்துக்கள் எவையுமில்லாத தொகை செலுத்தத் தவறியவர்கள் சம்பந்தப்பட்ட தொகை.	1.81
8	வரிவசூல் சட்டத்தின்கீழ் ஜப்தி செய்யப்படக்கூடிய சொத்துக்களைக் கொண்டிருக்கிற தொகை செலுத்தத் தவறியோர் இனங்களில் சம்பந்தப்பட்ட தொகை.	2.22
9	கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட இருப்பவை.	3.28
10	நீக்கப்படவுள்ள தொகை.	0.81
11	வரிக் குறைப்பின்கீழ் வருகிற தொகை ஆனால் அதற்கு இன்னும் செயல் வடிவம் கொடுக்கப்படவில்லை.	3.63
12	மேற்சொன்ன யாதொரு விவரங்களின்கீழ் வராத இனங்கள்	17.90
	மொத்தம்	48.89

நிலுவைத் தொகையை விரைவில் வசூலிப்பதற்காக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கீழ்க்காணும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:—

1. கோட்ட ஆயத்தீர்வை அலுவலர்/கோட்டாட்சியர், பிற மாவட்டத்தில்/மாநிலத்தில் வசிக்கின்ற தொகை செலுத்தத் தவறியவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையை வசூலிக்க வேண்டும்.

2. நிலுவையாக உள்ள இனங்களைப் பொறுத்த வரையில், கோட்ட ஆயத்தீர்வை அலுவலர்கள், சென்னை, உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அரசு உரிமையியல் வழக்கு நடத்துநரைக் காண வேண்டும். அவர்கள், வழக்குகளின் தற்போதைய நிலவரத்தை நிச்சயித்தறிந்து, வசூல் பணியை உடனடியாகத் தொடங்குவதற்காக, நீதிமன்றம் தடையாணை ஏதேனும் பிறப்பித்திருந்தால், அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. ஆயத்தீர்வை நிலுவைத் தொகையின் அன்றாட வசூல் தொடர்பான அன்றாட அறிக்கையை, மாவட்ட ஆட்சியர்கள் மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை ஆணையாளர் அலுவலகத்திற்கு நிகரி மூலம் அனுப்ப வேண்டும்.

4. ஒவ்வொரு மாதமும், நிலுவைத் தொகையில் 2 சதவீதத்தை வசூலிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. முன்னாளில் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகளின் உரிமம் பெற்றிருந்து ஆயத்தீர்வை செலுத்தத் தவறியவர்களிடமிருந்து பெருமளவிலான நிலுவைத் தொகையை வசூலிப்பதில் கோட்டாட்சியர்களையும்/ வட்டாட்சியர்களையும்/ பிர்கா வருவாய் ஆய்வாளர்களையும் கூட ஈடுபடுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

6. ஆயத்தீர்வை நிலுவைத் தொகையை வசூலிக்கத் தவறியுள்ள அல்லது குறைந்த அளவே வசூலித்துள்ள அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிக்கை அளிக்க வேண்டும் என்றும், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி தவறாமல் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திற்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

7. மாதாந்திர மாவட்ட வருவாய் நிர்வாகக் கூட்டத்தின்போது, ஆயத்தீர்வை நிலுவைத் தொகை வசூலில் ஏற்பட்ட முன்னேற்றத்தை ஆராயுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய காரணங்களினால், இப்பரிந்துரையை ஏற்று, தீர்வு காணப்பட்டதாகக் கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேலும் துறையின் பதில்

(8)

2007–2008 ஆம் கணக்கு ஆண்டுக்கு வசூலிக்கத்தக்க நிலுவைத்தொகையின் எஞ்சியுள்ள தொகை மொத்தம் ரூ.40.53 கோடி என்று கணக்கிடப்பட்டது. இத்தொகையில், 31–3–2008 வரையில் ரூ.65,87,962/– வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை குறித்த தனித்தனி புள்ளிவிவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

தொடர் எண்.	பொருள்	தொகை (ரூபாய் கோடியில்)
1.	நீதிமன்றம் பிறப்பித்த தடையாணைக்குஉட்பட்ட நிலுவைத் தொகை	1.90
2.	தடையாணையின் கீழ் வராத, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பாக்கித் தொகை	4.51
3.	ஏனைய மாவட்டங்களில் நிலுவையாக உள்ள ஆயத்தீர்வை வசூல் கோரிக்கைத் தொகை	7.03
4.	ஏனைய மாநிலங்களில், வரிவசூல் சட்டத்தின்கீழ் நிலுவையாக உள்ள ஆயத்தீர்வை வசூல் கோரிக்கைத் தொகை	4.54
5.	நாடிப்பு நிலை அறிவிப்பு மனுவில் சம்பந்தப்பட்ட நிலுவைத்தொகை	0,28
6.	இருப்பிடங்கள் தெரியவராத, தொகை செலுத்தத் தவறியவரின் இனங்களில் சம்பந்தப்பட்ட தொகை	4.03
7.	அசையும், அசையாச் சொத்துக்கள் எவையும் இல்லாத தொகை செலுத்தத் தவறியவர்கள் சம்பந்தப்பட்ட தொகை	1.42
8.	வரிவசூல் சட்டத்தின்கீழ் ஜப்தி செய்யப்படக்கூடிய சொத்துக்களைக் கொண்டிருக்கிற தொகை செலுத்தத் தவறியோர் இனங்களில் சம்பந்தப்பட்ட தொகை	4.17
9.	கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட இருப்பவை	–
10.	நீக்கப்பட உள்ள தொகை	0.45
11.	வரிக்குறைப்பின் கீழ் வருகிற தொகை ஆனால் அதற்கு இன்னும் செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை	4.12
12.	மேற்சொன்ன யாதொரு விவரங்களின் கீழ் வராத இனங்கள்	7.41
	மொத்தம்	39.86

மேலும் குழுவின் குறிப்புரைகள்

(9)

அளிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் நடப்பாண்டு தொடர்பானதாகும் என்றும், 1991–92 தொடர்பான நிலுவை விவரங்கள் அளிக்கப்படவில்லை என்றும் குழு அறிகிறது. 1991–92 ஆம் ஆண்டு தொடர்பான நிலுவை குறித்து அண்மை நிலையை அறிய குழு விரும்புவதுடன், இந்நிலுவையை வசூலிக்க விரைந்து நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு விரும்புகிறது.

நிலுவைத்தொகையை விரைவில் வசூலிப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கீழ்காணும் அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

(1) கோட்ட ஆயத்தீர்வை அலுவலர்/வருவாய் கோட்டாட்சியர், பிற மாவட்டத்தில்/ மாநிலத்தில் வசிக்கின்ற தொகை செலுத்தத்தவறியவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகையை வசூலிக்கவேண்டும்.

(2) நிலுவையாக உள்ள இனங்களைப் பொருத்தவரையில் கோட்ட ஆயத்தீர்வை அலுவலர்கள் உயர்நீதிமன்றத்திற்கு சென்று, அரசு உரிமையியல் வழக்குரைஞரை காணவேண்டும். அவர்கள், வழக்குகளின் தற்போதைய நிலவரத்தை நிச்சயித்து அறிந்து, வசூல் பணியை உடனடியாகத் தொடங்குவதற்காக, நீதிமன்றம் தடையாணை ஏதேனும் பிறப்பித்திருந்தால், அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(3) ஆயத்தீர்வை நிலுவைத்தொகையின் அன்றாட வசூல் தொடர்பான அன்றாட அறிக்கையை மாவட்ட ஆட்சியர்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் அலுவலகத்திற்கு நிகரி மூலம் அனுப்பவேண்டும்.

(4) ஒவ்வொரு மாதமும், நிலுவைத்தொகையில் 2% சதவீதத்தை வசூலிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(5) முன்னாள் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகளின் உரிமம் பெற்றிருந்து, ஆயத்தீர்வை செலுத்தத் தவறியவர்களிடமிருந்து பெருமளவிலான நிலுவைத் தொகை வசூலிப்பதில் வருவாய் கோட்டாட்சியர்களையும்/ வட்டாட்சியர்களையும்/ பிர்க்காவருவாய் ஆய்வாளர்களையும் கூட ஈடுபடுத்துமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(6) ஆயத்தீர்வை நிலுவைத்தொகையை வசூலிக்கத் தவறியுள்ள அல்லது குறைந்த அளவே வசூலித்துள்ள அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிக்கை அளிக்கவேண்டும் என்றும், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி தவறாமல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலுவலகத்திற்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(7) மாதாந்திர மாவட்ட வருவாய் நிர்வாகக் கூட்டத்தின்போது ஆயத்தீர்வை நிலுவைத் தொகை வசூலில் ஏற்பட்ட முன்னேற்றத்தை ஆராயுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய காரணங்களினால், இப்பிரிந்துரையை ஏற்று, தீர்வு காணப்பட்டதாகக் கருதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Serial No. (1)	Recommendation No. (2)	Paragraph No. (3)	Subject. (4)	Committee's observations / recommendations. (5)
2	11	8.3	Pendency of Internal Audit.	The Committee desires that periodical review meeting should be conducted in the Office of the Commissioner of Prohibition and Excise and details of pending audit paras should be entered in the Register at the end of each year. Proper programming should also be made for conducting the audit in time,. Action taken in this regard should be intimated to the committee.

Reply from the Department (6)	Comments of the Committee (7)
The Commissioner of Prohibition and Excise conducts Review meeting with Distillery Officer/Assistant Commissioner (Excise)/ Excise Supervisory Officer/Bonded Manufactory Officers every month and reviews their monthly performance. He also reviews the files pending for more than one year and the arrears to be collected and issues necessary instructions then and there. The Commissioner of Prohibition and Excise conducts regular review meeting also with Distillery Officers/Assistant Commissioner (Excise)/ Excise supervisory Officers on long pending audit and other items. Each year pending audit paragraphs are entered in the Audit Objections Register as recommended by the Public Accounts Committee. Every year, temporary tour programme is approved and followed for auditing different unit offices and Distilleres.	The Committee would like to know the latest position in the pendency of objections raised by Internal Audit Party.

Further Reply from the Department

(8)

As on date, 387 internal audit paras are pending for which the reports from the Unit Officers are awaited. The break up for the pendency are as follows:-

1994-1995	-	1
1995-1997	-	17
2001-2002	-	12
2002-2003	-	5
2003-2004	-	56
2004-2005	-	115
2005-2006	-	181
Total	-	386

The periodical review meetings are being conducted every month by the Commissioner of Prohibition and Excise with the Unit Officers and they are insisted to send the rectification report early.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Further comments of the committee

(9)

The committee desires speedy action in settlement of internal audit paras and also desires to have the latest position in this regard.

(5)

குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆய்வுக் கூட்டம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளரின் அலுவலகத்தில் நடத்தப்பட வேண்டும் என்றும், நிலுவையாகவுள்ள தணிக்கைப் பத்திகள் பற்றிய விவரங்கள் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது. உரிய நேரத்தில் தணிக்கைப் பணியை மேற்கொள்வதற்கென்று முறையான திட்டமிடுதல் பணிமேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும்.

துறையின் பதில்

(6)

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஒவ்வொரு மாதமும், வடிப்பாலை அலுவலர், உதவி ஆணையர் (கலால்) ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர் மற்றும் பிணையத்திலுள்ள தொழிற்சாலைகள் அலுவலர் (Bonded Manufactory Officer) ஆகியோரை அழைத்து, அவர்களின் அம்மாத செயல்பாடுகளை ஆய்வு செய்கிறார். மேலும், ஒராண்டுக்கு மேல் நிலுவையில் உள்ள கோப்புகள் மற்றும் நிலுவையில் உள்ள ஆயத்தீர்வைத் தொகைகள் ஆகியவற்றை விரைந்து வசூலிப்பதற்கும் உரிய அறிவுரைகளை அவ்வப்போது வழங்குவார். இது தவிர, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், வடிப்பாலை அலுவலர்/ உதவி ஆணையர் (கலால்), ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர் ஆகியோரை காலந்தவறாமல் கூட்டி நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள தணிக்கை மறுப்புரைகள் மற்றும் பல கோப்புகள் மீது நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்துவார். அதுபோல, நிலுவையில் உள்ள தணிக்கை பத்திகள் அனைத்தும் தணிக்கை மறுப்புகள் அனைத்தும், பொதுக் கணக்குக் குழு பரிந்துரைகளின்படி தணிக்கை மறுப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் பல அலுவலகங்கள் மற்றும் பலவிதமான வடிப்பாலைகளில் தணிக்கை செய்யும் பொருட்டு, தற்காலிக சுற்றுப் பயணத் திட்ட வகுக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்படுகிறது.

குழுவின் கருத்துரைகள்

(7)

உள் தணிக்கைக் குழு தெரிவித்த மறுப்புரைகளின் தற்போதைய நிலை பற்றி அறிய குழு விரும்புகிறது.

மேலும் துறையின் பதில்

(8)

இன்றைய தேதிவரை 387 துறை தணிக்கை பத்திகள் நிலுவையில் உள்ளன. அவற்றின் அறிக்கைகள், பிரிவு அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

1994–1995	–	1
1995–1997	–	17
2001–2002	–	12
2002–2003	–	5
2003–2004	–	56
2004–2005	–	115
2005–2006	–	181
மொத்தம்	–	386

ஒவ்வொரு மாதமும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையால் பிரிவு அலுவலர்களுடன் காலமுறை ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. சரி செய்யப்பட்ட அறிக்கையினை விரைவில் அனுப்பவும் அவர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலும் குழுவின் கருத்துரைகள்

(9)

உள், தணிக்கைப் பத்திகளை முடிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இது குறித்து அண்மை நிலையை அறியவும் குழு விரும்புகிறது.

Serial No.	Recommendation No.	Paragraph No.	Subject.	Committee's observations / recommendations.
(1)	(2)	(3)	(4)	(5)
3	14	10.6	Non recovery of Government dues from the defaulters.	The Committee also desires to be informed about (i) the action taken to trace out the where abouts of the defaulter and (ii) the latest stage at which the write-off of the amount stands.

Reply from the Department	Comments of the Committee
(6)	(7)
In respect of A.S Nos. 7 and 15/84-85 Government have not accepted the write-off proposals. Hence , the D.C. (Exice), Chennai, has been instructed to raise the demand and collect the arrears.	The Committee would like to know the latest position in this regard.

Further Reply from the Department	Further Comments of the committee
(8)	(9)
The Deputy Commissioner (Excise), Chennai has reported that the whereabouts of the defaulter could not be traceable. Tashildar, Egmore, Nungambakkam Taluk and concerned police station have been addressed to trace defaulter on 30.5.2008.	The Committee notes that the reference to the police station for tracing the defaulters was made only in may 2008 i.e., after nearly 20 years. The committee desires concerted efforts on the part of department to trace the defaulters and collect the arrears.

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

மேற்சொன்ன தொகையைச் செலுத்தத் தவறியவர்கள் எங்குள்ளனர் என்று கண்டுபிடிப்பதற்காக, எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும். (2) அந்தொகையைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்தும் தகவலளிக்க வேண்டும் என்று குழு மேலும் விரும்புகிறது.

துறையின் பதில்

குழுவின் கருத்துரைகள்

(6)

சா.க.எண்.7 மற்றும் 15/84–85 ஆகியவற்றைப் பொறுத்தவரையில் நிலுவையைத் தள்ளுபடி செய்வதற்கான செயல்குறிப்புகளை அரசு ஏற்கவில்லை. ஆகவே, அதற்கான கேட்புத் தொகையைக் கோரி, நிலுவைகளை வசூலிக்கும்படி. சென்னை, துணை ஆணையாளர் (ஆயத்தீர்வை) அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(7)

இது குறித்து தற்போதைய நிலவரம் பற்றி அறிய குழு விரும்புகிறது.

மேலும் துறையின் பதில்

மேலும் குழுவின் கருத்துரைகள்

(8)

தொகை செலுத்த தவறியவர் இருக்கும் இடத்தை கண்டறிய முடியவில்லை என்று சென்னை, துணை ஆணையர் (கலால்) அவர்கள் அறிக்கை அளித்துள்ளார். 30.5.2008 அன்று தொகை செலுத்தத் தவறியவரை கண்டறிய எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டத்தின் வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட காவல் நிலையம் ஆகியோர் கோரப்பட்டுள்ளனர்.

(9)

தொகை செலுத்தத் தவறியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக 2008 மே திங்களில் தான் அதாவது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு காவல் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டது என்று குழு அறிகிறது. தொகை செலுத்தத் தவறியவர்களைக் கண்டுபிடிக்க துறை ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவைகளை வசூலிக்க வேண்டுமென்று குழு விரும்புகிறது.

Serial No. (1)	Recommendation No. (2)	Paragraph No. (3)	Subject. (4)	Committee's observations / recommendations. (5)
4	16	12.4	Loss of revenue during 86-87due to belated confirmation of tenders by the Collector.	The Committee feels that considering the short duration of the lease period and the Government intention of re-introducing the prohibition from early 1987 the Department should have acted in right earnest and decided the issue sufficiently in advance so that such loss could have been avoided. The Committee further desires to know the steps taken for the regularization of the loss in such cases.

Reply from the Department (6)	Comments of the Committee (7)
In this case, the sale price could not be confirmed in time, with reference to the instructions issued by Government not to conform the sale. In the above case the shop was fetched much below 80% of the original upset price during the reauction. Therefore, the Government were addressed for taking a decision to accept the offer. The Government had to assess the situation in other districts also before deciding the issue. Details were obtained from all the districts and then the issue was decided. In this process there were some delay. Since this situation was not an anticipated one the Government could not have had readymade solutions. It is natural that whenever the new problems comes up the Government had to weigh all the consequences before taking a final decision. In such cases, delays become sometimes unavoidable. However, action is being taken to collect the notional loss arrears. The ex-licensee is reported to be residing in Ananthapur in A.P. and AC (E) Tiruvallur has been directed to serve as Nodal Officer for collecting the arrears in that state.	The Committee would like to know the latest position in this regard.

Further Reply from the Department

(8)

In this case, the ex-licensee is reported to be residing in Ananthapur in Andhra Pradesh and the Assistant Commissioner (Excise), Tiruvailur has been directed to serve a Nodal Officer for collecting the arrears. He has been instructed to contact the officials of that, State for collecting the arrears.

Further comments of the Committee

(9)

The Committee desires speedy action to address the concerned officer in Andhra Pradesh as the arrears has been pending for a long period. The Committee would also like to have a report on the action taken in this regard.

(5)

குறைந்த குத்தகைக் கால அளவையும் 1987–ஆம் ஆண்டிலிருந்து மதுவிலக்கை மீண்டும் செயல்படுத்த விழைந்த அரசின் நோக்கத்தையும் கருதிப்பார்த்து, துறை அக்கறையுடன் செயல்பட்டு, முன்னதாகவே முடிவெடுத்திருந்தால், இழப்பைத் தவிர்த்திருக்கலாம் என்று குழு கருதுகிறது. அத்தகைய நேர்வுகளில் இழப்பை முறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அறிந்துகொள்ள குழு மேலும் விரும்புகிறது.

துறையின் பதில்

(6)

இந்த இனத்தில் விற்பனையை உறுதிப்படுத்த வேண்டாமென அரசு வெளியிட்டிருந்த அறிவுரையின்படி விற்பனை விலையை உரிய காலத்தில் உறுதிப்படுத்த இயலவில்லை. மேற்சொன்ன இனத்தில் அந்த கடைக்கு மறு ஏலத்தின்போது ஏலத்தில் விடப்படும் உச்ச விலையைக் காட்டிலும் விலை 80 சதவீதம் குறைவாகவே கேட்கப்பட்டது. ஆகவே அதனை ஏற்பது குறித்து முடிவுசெய்ய அரசுக்கு எழுதப்பட்டது. இப்பிரச்சனைப்பற்றி தீர்மானிப்பதற்கு முன்னர் பிற மாவட்டங்களிலுள்ள நிலைமை குறித்தும் அரசு மதிப்பிடவேண்டியிருந்தது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விவரங்கள் பெறப்பட்டு, பின்னர், அப்பிரச்சனை பற்றி முடிவெடுக்கப்பட்டது. இத்தகைய நடைமுறைகளினால் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. அரசு, இத்தகையதொரு நிலையை எதிர்பார்க்காததால் தீர்வுகளை ஆயத்தநிலையில் வைத்திருக்க இயலவில்லை. புதிய பிரச்சனைகள் எப்போது எழுந்தாலும், அரசு, இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்னர், அனைத்துப் பின்விளைவுகளையும் ஆராய்வது இயற்கைதான். இத்தகையை இனங்களில், சில நேரங்களில், காலதாமதம் தவிர்க்க இயலாததாகும். எனினும் கருத்தியலான இழப்புகளை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. முன்னாள் உரிமதாரர், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள அனந்தப்பூரில் வசித்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் உதவி ஆணையாளர் (ஆயத்தீர்வை) அந்த மாநிலத்திலுள்ள முன்னாள் உரிமதாரரிடமிருந்து, நிலுவைகளை வசூலிப்பதற்காக தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் கருத்துரைகள்

(7)

இது குறித்து தற்போதைய நிலவரம் பற்றி அறிய குழு விரும்புகிறது.

மேலும் துறையின் பதில்

(8)

இந்நேர்வில், ஆந்திரப் பிரதேசத்தில், அனந்தப்பூரில் முன்னாள் உரிமதாரர் வசித்து வருவதாகவும் பாக்கித் தொகையை வசூலிப்பதற்காக திருவள்ளூர் உதவி ஆணையர் (கலால்) அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. பாக்கித் தொகையை வசூலிப்பதற்காக அம்மாநிலத்தின் அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தப் பட்டுள்ளார்.

மேலும் குழுவின் கருத்துரைகள்

(9)

நீண்டகாலமாக தொகைகள் நிலுவையாக இருப்பதால் ஆந்திரப்பிரதேசத்திலி உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு இது குறித்து தெரிவிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று குழு விரும்புகிறது. இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையை பெறவும் குழு விரும்பகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Serial No. (1)	Recommendation No. (2)	Paragraph No. (3)	Subject. (4)	Committee's observations / recommendations. (5)
5	19	13.6	Non-selection of unobejctionable site by the successful bidder for running Arrack shop-loss of revenue due to non running of Arrack Shop	The Committee also desires to know whether the Commissioner of Police had been addressed as stated earlier and any report received in this regard. Follow-up action, if any taken should be intimated to the Committee within one month.

Reply from the Department

(6)

In this case, the auction purchaser selected several places for locating the arrack shop. Since every place had been objected by the local residents, the auction purchaser was to select some other suitable place on every occasion. Though timley and proper action has been taken by the officials to sell the shop, it is only due to the fault of the original auction purchaser, this shop could not be sold on resale at the appropriate time. The auction purchaser is not available in the given address and his whereabouts could not be found. The Police have also reported on 8-12-1992 that the whereabouts are not known. Timely action has been taken at every stage and the loss occured only due to the default of the licensee as explained above. As such, the responsiblity could not be fixed on any officer.

Comments of the Committee

(7)

The Committee would like to know the latest position in this regard.

Further Reply from the Department

(8)

Whereabouts of the defaulter could not be traceable. Tahsildar, Mylapore-Triplicane Taluk and concerned Police Station have been addressed to trace the defaulter on 30.5.2008.

Further Comments of the committee

(9)

Committee notes that the reference to the police station for tracing the defaulters was made only in may 2008 i.e. after nearly 20 years. The committee desires concerted efforts on the part of the department to trace the defaulters and collect the arrears.

(5)

ஏற்கெனவே தெரிவித்தவாறு காவல் துறை ஆணையாளருக்குக் கடிதம் எழுதப்பட்டதா என்பது குறித்தும், இது தொடர்பாக அறிக்கை ஏதேனும் வரப்பெற்றதா என்பது குறித்தும் குழு அறிய விரும்புகிறது. தொடர் நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருந்தால் அது பற்றி ஒரு மாதத்திற்குள் குழுவிற்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

துறையின் பதில்

(6)

இந்த இனத்தைப்பொறுத்தவரையில், ஏலம் கோரி எடுத்தவர் சாராயக்கடை நடத்துவதற்காக பல்வேறு இடங்களைத் தெரிவு செய்தார். அவர் தெரிவு செய்த ஒவ்வொரு இடத்திலும் உள்ளூர் மக்கள் எதிர்ப்புத்தெரிவித்ததால், அவர், வேறு சில இடங்களைத் தெரிவு செய்யவேண்டியதாயிற்று, அந்தக் கடையை விற்க அதிகாரிகள் உரிய காலத்தில் முறையான நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், அந்தக் கடையை முதலில் ஏலத்தில் கோரி எடுத்தவர் தரப்பில் ஏற்பட்ட தவறால், உரிய காலத்தில், அந்தக் கடையை மறு ஏலத்தில் விற்பனை செய்ய இயலாமல் போயிற்று. கடையை ஏலத்தில் கோரி எடுத்தவரும், அவர் அளித்திருந்த முகவரியில் வசிக்கவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்றும் கண்டறிய இயலவில்லை. அவரின் வசிப்பிடம் எங்குள்ளது என்று கண்டுபிடிக்க இயலவில்லை என்று காவல் துறையினரும் 8-12-92-ல் தெரிவித்துவிட்டனர். அதிகாரிகள் ஒவ்வொரு நிலையிலும் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தும் மேலே விளக்கியபடி உரிமதாரரின் தவறு காரணமாகவே வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஆகவே, அதற்கான பொறுப்பை, எந்த அதிகாரியின் மீதும் சுமத்த இயலாமல் போயிற்று.

மேலும் துறையின் பதில்

(8)

தொகை செலுத்தத் தவறியவர் எங்கிருக்கிறார் என்பதை கண்டறியமுடியவில்லை 30.5.2008 அன்று மைலாப்பூர் -திருவல்லிக்கேணி வட்ட, வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட காவல் நிலையம் ஆகியோர், தொகை செலுத்தத் தவறியவரை கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குழுவின் கருத்துரைகள்

(7)

இது குறித்த தற்போதைய நிலவரம் பற்றி அறிய குழு விரும்புகிறது.

மேலும் குழுவின் கருத்துரைகள்

(9)

தொகை செலுத்தத் தவறியவர்களை கண்டுபிடிப்பதற்காக 2008 மே திங்களில்தான் அதாவது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு காவல்நிலையத்தில் தெரிவிக்கப்பட்டது என்று குழு அறிகிறது. தொகை செலுத்தத் தவறியவர்களைக் கண்டுபிடிக்க துறை ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிலுவைகளை வசூலிக்க வேண்டுமென்று குழு விரும்புகிறது.

Serial No.	Recommendation No.	Paragraph No.	Subject.	Committee's observations / recommendations.
(1)	(2)	(3)	(4)	(5)
6	22	14 6	Non-levy of penalty for wastage beyond permissible limits.	The Committee also desires to be the apprised of the steps taken by the Department to get the stay vacated and the amount recovered from the defaulters. The collection particulars should be furnished within one month.

Reply from the Department	Comments of the Committee.
(6)	(7)
In the counter affidavit filed in the writ petition in questions, the above amendment made to the rules has been mentioned. It has been proposed to move the High Court for getting the stay vacated. After stay is vacated, action will be taken to collect the amount of penalty from the defaulter.	The Committee would like to know the latest position in this regard.

Further Reply from the Department	Further Comments of the committee
(8)	(9)
The W.P N.52/95 filed by Tvl. Balaji Distilleries was allowed by the High Court of Chennai. The Government Pleader of High Court, Chennai has opined that this is a fit case for filing appeal. Accordingly, Memorandum of Writ Appeal has been sent to Government Pleader for filing in the High Court of Madras on.21.9.07.	The Committee would like to know whether appeal has been preferred by the Department in the High Court and desires to have the latest position in this regard.

குழுவின் குறிப்புரைகள்/பரிந்துரைகள்

(5)

தடையாணையை நீக்குவதற்காகவும் மற்றும் தொகையைச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து தொகையை வசூலிப்பதற்காகவும் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்படவேண்டுமென்று குழு மேலும் விரும்புகிறது. வசூல் பற்றிய விபரங்கள் ஒரு மாதத்திற்குள் அளிக்க வேண்டும்.

துறையின் பதில்

குழுவின் கருத்துரைகள்

(6)

இந்த நேர்வில் தொடர்புடைய ரிட் மனுவிற்குரிய எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் (Counter affidavit) மேற்சொன்ன திருத்தம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தடையாணை விலக்கப் பெறுவதற்காக உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தடையாணை விலக்கப்பெற்ற பின்னர். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து அதனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(7)

இது குறித்து தற்போதைய நிலவரம் பற்றி அறிய குழு விரும்புகிறது.

மேலும் துறையின் பதில்

மேலும் குழுவின் கருத்துரைகள்

(8)

திருவாளர்கள். பாலாஜி வடிசாலைகள் தாக்கல் செய்த 52/95ஆம் எண் ரிட் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதித்தது. இந்த வழக்கு மேல்முறையீடு செய்வதற்கு தகுதியானது என சென்னை உயர்நீதிமன்ற அரசு உரிமையியல் வழக்கு நடத்துநர் கருத்து தெரிவித்துள்ளார். அதற்கிணங்க, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பொருட்டு, மேல் முறையீட்டு மனு அரசு உரிமையியல் வழக்கு நடத்துநருக்கு 21.9.2007 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

(9)

துறை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதா என்பதையும் இது தொடர்பான அண்மை நிலையையும் அறிய குழு விரும்புகிறது.

Serial No.	Recommendation No.	Paragraph No.	Subject.	Committee's observations / recommendations.
(1)	(2)	(3)	(4)	(5)
7	23	15.4	Non recovery of Government dues	The Committee observes, that in certain cases stay orders were obtained in the High Court and in certain other cases suits filed in the Districts Courts, since the loss was only notional. The Committee may be appraised of the steps taken by the Department. to get the stay vacated and effect recovery of the revenue due within one month.

Reply from the Department

(6)

A.S. No. 42/83-84.

A sum of Rs. 36,072 was due from the defaulter Thiru. P. Palanisamy, who expired in 1994. His son ;Thiru R.Rajavel has filed a suit in O.S. No. 1998/94 in D.M.C. Coimbatore against notional loss collection. The case was dismissed. Subsequently action was initiated against the legal heirs and they remitted Rs.23,000 out of Rs. 36,072. Effective steps have been taken to collect the balance amount as well as the 5 % interest from the defaulter.

A.S. No. 97/83-84

Thiru Thambi Gounder, Ex-licensee of A.S. No. 97/83-84 has fied a suit in D.M.C. Coimbatore against the collection of notional loss and the suit was dismissed. Now the defaulter has filed an insolvent petition in I.A.460/96 . I.P. 2/95. The case is still pending. Final hearing was held on 25-2-2004. Judgement is reserved.

A.S. No. 120/83-84

The defaulter initially informed that he was residing at Door No. 7/29, Valliammal Street, Ramanathapuram Village, Coimbatore, (South). But on enquiry, it was found that he was not residing there. The owner of the house, Thiru M. Vyapuri informed that no such person by nae Chinnaraj was residing in his house. The write-off proposals has been submitted. Government have not accepted write off proposals in general and instructed to collect the arrears. The Commissioner of Prohibition and Excise has also instructed all the ACs and DCs (Excise) to raise

Comments of the Committee

(7)

The Committee desires to have a consolidated position of the cases pointed out in the audit and a report on the latest position of the pendency of Rs.40.49 lakhs as pointed out.

necessary demand for such notional loss and collect the same. The Commissioner of Prohibition and Excise has also instructed them to achieve 2% collection of pending arrears in every month. The Commissioner fo Prohibition and Excise has reviewed the collection particulars in the monthly DCB separately.

A.S. No. 123/83-84

The defaulter Tmt. M. Sarojini had given her address as Door No. 118, Tatabad, 6th Street, Coimbatore. But on enquiry it was found that she was not actually residing at the above address. The whereabout of the defaulter has not been known. Hence, write off proposals has been submitted. Government have not accepted write off proposals in general and instructed to collect the arrears. The Commissioner of Prohibition and Excise has also instructed all the ACs and DCs (Excise) to raise necessary demand for such notional loss and collect the same

The Commissioner of Prohibition and Excise has also instructed them to achieve 2 % collection of pending arrears in every month. The Commissioner of Prohibition andl Excise has reviewed the collection particulars in the monthly DCB (Demand, collection and Balance Statement) separately.

A.S. No. 141 and 196/83-84

Action was initiated under RR Act to collect the notional loss of Rs.1,27,655 from the defaulter and D Notice was issued to him on 19-8-84. Since he did not come forward to remit the amount Form No.5 was issued on 27-10-84 for the attachment of his landed properties and served on him on 16-11-84. Action was pursued to bring his landed property to sale. In the meantime, the defaulter has filed a WMP 29680/94 in W.P. No. 19474/94 and obtained injunction orders in High Court against the recovery proceedings. Counter Affidavit has been filed on 15-2-95. Case disposed in favour of the Government . Hence, action was initiated and out of Rs.1,27,655 a sum of Rs. 75,655 has been collected. The balance amout of Rs. 52,000 will be collected soon. It has been watched separately in the monthly DCB of the Office of the Commissioner of Prohibition and Excise.

Further Reply from the Department

(8)

Arrack Shop No.42/83-84	The entire amount of Notional loss amount of Rs.36,572/- has been collected from defaulter.
Arrack Shop No.97/83-84	Judgement delivered in favour of the defaulter and declared as insolvent in I.P. No. 2/95 I.A. No 460/96 in subordinate judge Court, Coimbatore.
Arrack Shop No.120/83-84	Whereabouts of the defaulter is not known. Police report is awaited for taking further action.
Arrack Shop No. 123/83-84	Whereabouts of the defaulter is not known Write off proposal is awaited.
Arrack Shop No.141 and 196 83-84	Entire amount of notional loss of and 196/ Rs.1,27,655/-has been collected.

Further Comments of the Committee

(9)

The committee desires to know the steps taken by the department to trace the defaulters in respect of a.s No:120 and 123/83-84.

(5)

சில நேர்வுகளில், உயர்நீதிமன்றத்தில் தடை ஆணைகள் பெறப்பட்டன என்றும், வேறு சில நேர்வுகளில், இழப்பு சிறிதளவாக இருந்ததால், மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றும் குழு அறிகிறது. தடை ஆணையை நீக்கவும், வரவேண்டிய வருவாய் தொகையை வசூலிக்கவும் துறை எடுத்த நடவடிக்கைகள் பற்றி ஒரு மாதத்திற்குள் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும்.

(6)

சா.க. எண்.42/83–84

